ஐக்கிய அமெரிக்க தூதரகம்
கொழும்பு
ஊடக அறிக்கை
பொது அலுவல்கள் பிரிவு
தொ.பே.: +(1)249-8100 - பெக்ஸ்: 10(1)244-9070
ஈமெயில்: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20190427

தாக்குதல்களை அடுத்து இலங்கைக்கு உதவி வழங்கும் அமெரிக்கா

ஏப்ரல் 27, கொழும்பு: உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களை அடுத்து விசாரணைகளுக்கு ஒத்துழைக்கவும் மீட்பு முயற்சிகளுக்கும் பரந்துபட்ட ஒத்துழைப்பை ஜனாதிபதி ட்ரம்ப் இலங்கைக்கு வழங்கினார். இலங்கை அரசாங்கம் இந்த உதவியை ஏற்றுக்கொண்டதுடன்இ வெடிபொருட்களை கண்டறிதல்இ சம்பவ இடங்கள் பற்றிய விசாரணைகள் மற்றும் தடயவியல் பகுப்பாய்வுகள் உள்ளிட்ட நடவடிக்கைகளில் அமெரிக்க அணிகள் ஏற்கனவே இலங்கை அதிகாரிகளுடன் பணியாற்றி கொண்டிருக்கின்றனர். அனைத்து நடவடிக்கைகளும் இலங்கை அதிகாரிகளின் கோரிக்கையின் பேரிலும் அவர்களுடன் ஒருங்கிணைந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த பங்காண்மையானது குறுகிய கால அடிப்படையிலானதும் தற்காலிகமானதும் மற்றும் அண்மைய தாக்குதல்கள் குறித்ததும் அதேபோல்இ குற்றவாளிகளை நீதிக்கு முன்பாக கொண்டு வருவதற்கானதுமாகும்.